முற்பகல் 10.25

(தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலேயும், அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலேயும் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. இன்றையதினம் எடுத்துக் கொள்வதாக இருந்த அலுவல்கள் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பேரவை மீண்டும் நாளை (1-3-1996) காலை 10.00 மணிக்குக் கூடும்.

2. வினாக்கள்-விடைகள்*

உடுக்குறியிடாத வினாக்கள்

(இணைப்பு-I) (விதி 51-இன் கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று அவற்றுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகளுடன் அவை முன் வைக்கப்பெற்றவை-பட்டியல்கள் 6 முதல் 8 வரை - இணைப்பு-I ஆக (169 ஆம் பக்கம் முதல் 330 ஆம் பக்கம் வரை) சேர்க்கப்பட்டுள்ளன.

3. கவன ஈர்ப்பு

(அனுமதிக்கப் பெற்று அவைமுன் வைக்கப்பெற்றவை இணைப்பு-II ஆக பக்கம் 331 முதல் 335 வரை அச்சிடப்பட்டுள்ளன.)

பின்னர், பேரவை முற்பகல் 10.26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

81. வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையினரால் வெளியிடப்பட்ட 21-6-1975 ஆம் நாளிட்ட II(1)/CT & RE/685/75

அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11-1-1996 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

82. இனிப்பகத்தின் உரிமையாளர்கள் இனிப்பு மற்றும் காரம் விற்பனையில் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-1-1996 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

83. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து, உள் (போக்குவரத்து-VII) துறையின் 14-10-1993 ஆம் நாளிட்ட 1542 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

84. சென்னை, பெருங்களத்தூர், செயிண்ட் காமிலஸ் மகள் சங்கத்திற்குச் சொந்தமான டி.என்.21/W.4432 மோட்டார் வண்டியை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்குப் பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன சங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து, உள் (போக்குவரத்து-I) துறையின் 4-10-1995 ஆம் நாளிட்ட 183 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

85. கோவை, சிங்கநல்லூர், செயின்ட் அன்னீஸ் மறுவாழ்வு மையத்திற்குச் சொந்தமான டி.என்.37/J.9255 மோட்டார் வண்டியை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்குப் பயன்படுத்தாமல் கல்விக்காக மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன மையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து, உள் (போக்குவரத்து-I) துறையின் 22-11-1995 ஆம் நாளிட்ட 1739 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின்

(தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

86. திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், மடத்துக்குளம், திருவாளர்கள் பிரகாசபுரம் ஆசிரமம் மற்றும் அனாதை இல்லத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகன எண் டி.என்.57/Z.2537-க்கு மோட்டார் வாகன வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து, உள் (போக்குவரத்து-I) துறையின் 27-9-1995 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

87. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து, உள் (போக்குவரத்து-III) துறையின் 29-12-1995 ஆம் நாளிட்ட 1935 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 41/1992) 8(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

88. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து, உள் (போக்குவரத்து-III) துறையின் 6-1-1996 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகைமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 41/1992) 8(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

89. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து, உள் (போக்குவரத்து-VII) துறையின் 4-2-1994 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

90. பாண்டிச்சேரி, அரபிந்தா பன்னாட்டு கல்வி மையத்திற்குச் சொந்தமான எண் PY.01-A/7219 மற்றும் PYQ 2468 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு அல்லது ஊதியத்திற்குப் பயன்படுத்தாமல் தமிழ்நாட்டில் கல்வி ஆய்வுப் பயணத்திற்காக மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன மையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து, உள் (போக்குவரத்து-I) துறையின் 14-7-1995 ஆம் நாளிட்ட 1062 ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

91. 1994-95 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

92. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற நிதி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

93. 1994-95 ஆம் ஆண்டிற்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

94. 1994-95 ஆம் ஆண்டிற்கான அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

95. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

96. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)].

97. 1994 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் நாளன்று, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், செங்கல்பட்டு சார் ஆட்சியர் அலுவலகத்தின் முன் காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு

குறித்து அமைக்கப்பட்ட நீதிபதி இ.ஜெ. பெல்லி விசாரணைக் கமிஷனின் அறிக்கை [*1952* ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *60/1952*) *3(4)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

43. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள், *1995-96* (இருபத்தி மூன்று முதல் இருபத்தி ஆறு வரை).

44. பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள், *1995-96* (இருநூற்று எண்பத்தைந்து முதல் முன்னூற்று இரண்டு வரை).

45. வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகம் புதிதாக அமைப்பது குறித்து சட்டமன்றப் பேரவை விதி *212*-ன் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

46. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (*6*வது பட்டியல்) (வரிசை எண் *1* முதல் *146* வரை).

47. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (*7*வது பட்டியல்) (வரிசை எண் *1* முதல் *50* வரை).

48. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (*8*வது பட்டியல்) (வரிசை எண் *1* முதல் *103* வரை).

49. சட்டமன்றப் பேரவை விதி *55*-ன் கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண் *1* முதல் *5* வரை).

50. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் *27-8-1969* ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது).

31-3-1992

1. திரு. ம. தனபால்

2. டாக்டர் அ. ஶ்ரீதரன்